நாள் -24.11.2021

O.S.No.276-2013

வா.சா. 3 (ராமகிருஷ்ணபெருமாள் ) அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு கு.வி

இவ்வழக்கில் வா.சா,1 மற்றும் வா.சா.2 தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதி தரப்பு சான்றாவணங்கள் குறித்து வ.சா.1 மற்றும் 2 குறித்த சாட்சியத்தின் விபரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க 2ம் முறையாக தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். இவ்வழக்கினை இவ்வழக்கின் 1 மற்றும் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் மற்றும் வேலுதாஸ் ஆகியோர் தான் நடத்திவருகிறார் என்றால் அவர்களுடன் சேர்ந்து சூரப்பள்ளம் ஊர்மக்கள் சோந்து பணிபுரிகின்றர். நான் இந்திய ராணுவ படையில் 1981ல் பணியில் சேர்ந்தேன் அதன் பின்னர் 21 வருடம் ராணுவத்தில் பணிபுரிந்து 2002ல் பணிஓய்வு பெற்றேன். நான் பணிபுரிந்தபோது ராணுவத்தில் ஓட்டுனராக பணிபுரிந்தேன். பணிபுரிந்த காலத்தில் வடஇந்தியாவின் பல இடங்களில் பணிபுரிந்துவந்தேன். நான் ராணுவத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில் சூரப்பள்ளத்தில் எந்த பதவிகளிலும் இல்லை. மேலும் ராணுவத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில் சூரபள்ளம் ஊர் குறித்து எந்த வழக்குகளிலோ சட்ட நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை என்றால் சரிதான். சூரபள்ளம் ஊர் குறித்த வருவாய் ஆவணங்களை நான் பார்வையிட்டது கிடையாது. சூரபள்ளம் ஊர் மக்களை பிரதிநிதியாக இவ்வழக்கில்

சாடசியம் அளிக்க வந்துள்ளதாக என்னுடைய மு.வி சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதுகுறிதது எந்த பகரஅதிகார பத்திரம் என்போரில் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். சூரப்பள்ளம் பெரிய ஊர் என்றால் சரிதான். சூரப்பள்ளம் ஊருக்கான தனி பஞ்சாயத்து கிடையாது என்றால் சரிதான். சூரபள்ளம் நீண்டகரை பி கிராமத்தில் ஒரு பகுதியாக வரும் என்றால் சரிதான். 1981ம் ஆண்டிற்கு முன்னர் சூரப்பள்ளம் ஊரில் 400 வீடுகள் இருந்தன. மேற்படி 400வ ீடுகளும் கணபதிவுரம் பஞ்சாத்து , மேலசங்கரன்குழி பஞ்சாயத்து, மற்றும் வெள்ளிசந்தை ஆகிய பஞ்சாயத்திற்கு உள்ளடங்கியிருந்தன. சூரப்பள்ளம் ஊருக்கு தனிபஞ்சாயத்து தேவப்படுவதாக எக்காலத்திலும் எந்த மனுவும் கொடுக்கப்பட்டது கிடையாது. சூரப்பள்ளத்தின் பெரும் பகுதி கணபதிபுரம் பஞ்சாயத்தில் உள்ளது அங்கு தற்போது 400 முதல் 450 வீடுகள் உள்ளது. சூரப்பள்ளத்தினை சேர்ந்த நபர்கள் ஊருக்கு வெளிபுரம் உள்ள பல இடத்தில் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான். சூரப்பள்ளம் ஊருக்கு வெளியே கூடியுள்ள மக்களுக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. சூரப்பள்ளத்து ஊரினை கூற்றியுள்ள பகுதியில் குடியுள்ள மக்கள் தங்களது பகுதியினை சூரப்பள்ளம் ஊர் என்று குறிப்பிட விரும்பவில்லை. ஆதியில் சூரப்பள்ளத்தில் குடியிருந்து 400 வீடுகளின் பெயர் விரங்கள் எங்கள் கைவசத்தில் உள்ளது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். மேற்படி பெயர் விபரங்கள் கணபதி புரம் பஞ்சாயத்தில் உள்ளது என்றால் சரிதான். அதனுடன் சேர்ந்து மேலசங்கரன்

குழி,வெள்ளிசந்ததை பஞ்சாயத்திலும் உள்ளது. சூரப்பள்ளம் ஊருக்கு வடக்கு பகுதி உள்ள பகுதிக்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏ்னறால் சரிதான். சூரப்பள்ளம் புல எண். 168,170, 171,182,183,184,192- 2017 வரை உள்ளன. மேற்படி புல எண்கள் அனைத்தும் வேம்பனூர் கிராமத்திற்க்கு உட்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புலஎண்ணில் உள்ள நிலங்களை சூரப்பள்ளம் ஊருடன் இணைத்து அழைக்கவேண்டும் என்று அரசிடம் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் மாவட்ட ஆட்சியரிடம் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்படும் மனுவில் கையெழுத்து இடவில்லை. மேற்படி மனுவிலும் மேற்குறிப்பிட்ட புல எண் கொண்ட நிலங்கள் சூரப்பள்ளளம் ஊர் பஞ்சாத்துடன் சேர்ந்து அழைக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை. வேம்பனூர் என்று குறிப்பிடுவது வருவாய் கிராமத்தினை குறிப்பிடும் என்றால் சரிதான். மேற்படி 10 புல எண் கொண்ட வேம்பனூர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்றால்சரிதான். எந்தெந்த ஊர்கள் எல்லாம் வேம்பனூர் வருவாய் கிராமத்திற்கு வருகிறது என்பது குறித்த பட்டியலை நான் பார்வையிட்டது கிடையாது. வேம்பனூர் கிராமத்திற்கு உள்பட்ட வருவாய் கிராமங்கள் எவை என்ற பட்டியல் உள்ளது எனற்ால் சரிதான் அதில் சூரபள்ளம் குறிப்பிடபடவில்லை சரியல்ல. வாதி தரப்பு சாட்சிகள் மூலமாக மேற்படி வருவாய் கிராமம் குறித்த பட்டியல் இவ்வழக்கில் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரிதான்,அந்த பட்டியல் என்னுடைய கைவசத்தில் இல்லை. மேற்படி 10 புல எண்கள் வேம்பனூர் கிராம பட்டியலில்

சூரப்பள்ளம் என்ற பெயர் இல்லை என்றால்சரியல்ல. சூரப்பள்ளம் ஊர் பெயர் வருவாய் கிராம பட்டியலில் உள்ள போது எந்த காரணத்திற்கான இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சூரப்பள்ளம் கிராமத்தினை பேயோடு ஊருடன் இணைக்க முற்பட்டதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பேயோடு ஊரினை சார்ந்த சீனிவாசன், ஐயாசாமி ஆகியோர் பேயோடுடன் சேர்த்து சூரப்பள்ளம் ஊரினை சேர்க்க முயற்ச்சி செய்தனர். நான் ராணுவத்தில் பணியில் இருந்த காலகட்டத்தில் சூரபள்ளம் ஊர் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.814/1988 வழக்கு குறித்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.814/1988 வழக்கு குறித்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அது இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதுஎ ன்றால் எனக்கு அதுபற்றிய விபரம் தெரியாது. ஆகவே அவ்வழக்கு குறித்து செய்திதாளில் ஏற்படுத்திய பொது பரசியம் ஆகி விபரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். சூரப்பள்ளம் ஊருக்கான பஞ்சாத்து தேர்தல் கணபதிபுரம் பஞ்சாத்திலும், மேலசங்கரன்குழி பஞ்சாயத்திலும் நடக்கும். மேலசங்கரன்குழி பஞ்சாயத்தில் பிளாக் எண்.7 உள்ளது என்றால் சரிதான். அதில் சூரப்பள்ளம் ஊர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேலசங்கரன்குழி பஞ்சாத்தில் பிளாக் குறித்த பட்டியல் நான் பார்வையிட்டது கிடையாது. பிளாக் எண்.7 என்பது பேயோடு என்று ஏழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்படவில்லை. மேலசங்சரன்குழி பிளாக் எண் 7ல் சூரப்பள்ளம் என்ற பெயர் இல்லை என்றால் சரியல்ல பெயர் உள்ளது

அந்த பட்டியலினை இவ்வழக்கில் தாக்கல்செய்யலாம். மேற்படி புல எண்ணில் உள்ள பேயோடு என்று அழைக்கப்பட்டு வருகிறது என்பதினை காண்பிப்பதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. அ.வ.எண்.814/1988 என்ற வழக்கில் நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை மேற்படி வழக்கு குறித்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட விதிநடத்து மனுவிலும் நான் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சியதலைவரின் ஆணையின் அடிப்படையில் தான் பெயர் பலகையில் பேயோடு என பெயர் மாற்றம் செய்ததாக மேலசங்கரன்குழி பஞ்சாயத்தில் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சிதலைவர் குறிப்பிட்ட ஆணையை நான் நகல் எடுத்து பார்வையிட்டது கிடையாது. ஆகவே இவ்வழக்கு பிரச்சனை மாவட்ட ஆட்சிதலைவரின் ஆணையின் அடிப்படையில் தான் எழுந்தது என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த ஆணை செல்லதக்கதல்ல என்றும் அதனை மாற்றி அமைக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டதுள ன்றால் சரிதான், மேற்படி மனுவில் நான் கையொப்பம் இடவில்லை. மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த ஆணை செல்லதக்கதல்ல என்றும் அதனை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசிடம் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஊர் பெயர் மாற்றம், மற்றும் அதன் எல்லைகள் மாற்றம் செய்வது குறித்து தமிழக அரசாங்கத்தினால் தான் ஆணை பிறப்பிக்க இயலும். ஆகவே ஊர் பெயர் மாற்றம் குறித்து தமிழக அரசிடம் பெயர் மாற்றம் குறித்து எந்த மனுவும ் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குறிப்பிட்ட புலஎண்ணிற்கு உட்டபட்ட நிலங்களை சூரப்பள்ளம் என்று தான் அழைக்கவேண்டும் என்று பஞ்சாத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மேலும் மேலசங்கரன் குளி பஞ்சாத்தில் மேல் குறிப்பிட்ட புல எண் குறித்து சூரப்பள்ளம் என்று தான் அழைக்கவேண்டும் என்று பஞ்சாத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. பொதுவாக பஞ்சாத்தில் ஏற்படுத்தப்படும் தீர்மாமனம் மாவட்ட ஆட்சிதலைவர் முன்னிலையில் வைக்கப்படும் என்றால் அதுபற்றி தெரியாது. இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் குறித்து பஞசாத்து அல்லது மாவட்ட ஆட்சிதலைவரிடம் எந்த ம-னுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆகவே முறையாக மனு தாக்கல் செய்த பரிகாரம் கோராத காணத்தினால் இம்மனு நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மு-வி சாட்சியத்தில் 2011ம் மாதம் அக்டோபர் மாதம் மாவட்ட ஆட்சிதலைவர் பஞ்சாத்து ரசீதுகளில் பேயோடு என்று தான் ஊர் பெயர் அழைக்கவேண்டும் என்று உத்தரவு போடடுள்ளார் என்று குறியுள்ளேன் என்றால் சரிதான். மேலும்அவ்வாறு கடிதம் எழுதுவதற்கு மாவட்ட ஆட்சிதலைவருக்கு அதிகாரம் கிடையாது என்று குறிப்பிடடுள்ளேன் எனற்றால் சரிதான். ஆகவே 2011ம் ஆண்டில் மாவட்ட ஆட்சி தலைவர் பிறப்பித்த ஆணையினை ரத்து செய்ய கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வழக்கிலும் மாவட்ட ஆட்சி தலைவர் பிறப்பித்த ஆணையினை ரத்து செய்ய கோரி எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். தற்போதும் வழக்கு பகுதியில்

வசித்துவரும் மக்கள் பேயோடு என்ற பெயரில் தான் வரி செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. மேற்குறிப்பிட்ட புல எண்கள் அனைத்தும் வேம்பனூர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்றாலும், பேயோடு ஊரின் ஒரு பகுதி என்றாலும் சரியல்ல. 1975ம் ஆண்டு அரசு வெளியீடு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் நான் பார்த்தது இல்லை. மேற்படி புல எண்ணில் உள்ள பகுதிகள் வேம்பனூர் வருவாய் கிராமத்தினை சார்ந்தது என்றால் சரிதான்,. ஆனால் போயாடு பகுதியை சார்ந்து கிடையாது சூரப்பள்ளம் பகுதியை சார்ந்து. வழக்கு பகுதி பேயோடு என்று தான் அழைக்கப்படவவேண்டும் என்றாலும் சூரப்பளள்ளம் என்று அழைக்கப்படகூடாது என்றால் சரியல்ல. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பிற்கு எதிராக மாண்பு மிகு உயர்நீதிமன்றத்திலோ, அல்லது உச்ச நீதிமன்றத்திலோ மறுபரிசீலனைக்கான மனு அல்லது மேல்முறையீடுடோ தாக்கல் செய்யவில்லை. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடத்தும்போது மாவட்ட ஆட்சி தலைவர் பிறப்பித்த ஆணையினை இவ்வழக்கில் தாக்கல் செய்திருந்தால் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஊர் பெயர் குறித்து இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டிருந்தபோதும் இவ்வழக்கினை தவறாக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. அவ.எண்.814/1988 வழக்கு குறித்த விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய மு.வி சாட்சியத்தில் அவ.எண்.814/1988 வழக்கு குறித்த என்னுடைய வழக்கறிஞர் கூறி நான் அறிந்துகொண்டதாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி

வழக்கில் மேலசங்கரன்குழி பஞ்சாத்து பிளாக் எண் 7 உட்பட்ட பகுதி பேயோடு என்று தான் அழைக்கவேண்டும் என்று தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பகுதி குறித்து முன் ஆவணங்களை படித்து பார்க்காமலும், மேலும் முன் விபரங்களை முழுமையாக அறிந்துகொள்ளாமல் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

ம.வி. இல்லை.

கு.வி முடிக்கப்படுகிறது.